1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் வேண்டுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தனி நபர் ஊதிய முரண்பாட்டுக் குழுவின் சிபாரிசு. . .

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்கள் : இந்தக் கேள்விக்குச் சம்பந்தப்பட்டதா ? முடிந்த கேள்விக்கு சம்பந்தப்பட்டதா ? மத்தியில் ஒன்றும் பேசக்கூடாது. அது வரும்போது பேசலாம்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, விளக்கம் தானே கேட்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : வினாக்கள் முடிவடைந்து விட்டன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) பேரவையிலிருந்து செய்திகள்.

MR. CHAIRMAN : I have received messages from the Hon. Speaker transmitting copies of the following Bills as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Council :

1. The Tamil Nadu Debt Relief Bill, 1972 (L.A. Bill No. 21 of 1972) ; and

2. The Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972).

(2) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு உறுப்பினர் தேர்தல்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு செல்லுபடியாகும் வகையில் நேமகம் செய்யப்பட்ட வேட்பாளர் திரு. எம். இராமநாதன், எம். எல். சி., அவர்கள் ஒருவரே. அவர் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு உறுப்பினர் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக நான் இதனால் மேலவைக்கு அறிவிக்கிறேன்.